# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம்
## (திருத்தம்)

***2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*தொழில் அமைச்சர் அவர்களால் 2021, மாச்சு மாதம் 24 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, மாச்சு மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***37 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2* :** *இவ்வாசகம், 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஏதேனும் கைத்தொழிலில் அல்லது சேவையில் உள்ள வேலையாளொருவரின் தேசிய குறைந்தபட்ச மாதாந்த வேதனம் மற்றும் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் என்பவற்றை முறையே பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாகவும், ஐந்நூறு ரூபாவாகவும் அதிகரிப்பதாகும்.*

**வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம்**
**(திருத்தம்)**

*ச.வ.- ஓ. 25/2019*

### *2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், “பத்தாயிரம் ரூபாவாதல் வேண்டுமென்பதுடன், ஒரு வேலையாளின் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் நானூறு ரூபாவாதலும் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாதல் வேண்டுமென்பதுடன், ஒரு வேலையாளின் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் ஐந்நூறு ரூபாவாதலும் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.